வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 24.06.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 175 பக்கங்கள் : 12





# செம்மணியில் நேற்றுக் காலை ஏற்றப்பட்டது அணையா விளக்கு!

## மூன்று நாள்கள் தொடர் போராட்டம்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூன் 24

**யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப்புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டி நேற்று காலை அணையா விளக்கு ஏற்றப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

தமிழ் மக்கள் பலரது உடல்களை தாங்கிய மனிதப் புதைகுழிகள் தமிழர் தாயகமெங்கும் அதிகரித்து செல்கின்ற நிலையில், தீர்வுகள் இதுவரை எதுவும் கிடையாத நிலையில் குறித்த விடயத்தை சர்வதேச பார்வைக்கு கொண்டு செல்வதுடன், அதனூடாக உறவுகளுக்கு நீதி கிடைக்க வலியுறுத்தும் நோக்கில் மக்கள் மயப்படுத்தப்பட்ட வகையில் இந்த 'அணையா விளக்கு' போராட்டம் நேற்று செம்மணியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1996 இல் சருகாகிப் போன கிருஷாந்தியின் உறவினரால் சுடரேற்றிப் போராட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் சட்டத்தரணி வைஸ்ணவி சண்முகநாதன் தலைமையில், போராட்டத்தில் சமயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்பின் பிரதி நிதிகள், பொதுமக்கள்

11

# சர்வதேச நீதி விசாரணையே தமிழ் மக்களுக்கு வேண்டும்!

## செம்மணியில் சிறிதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 24

சிங்கள அரசாங்கங்களால் நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். தற்போதைய அநுர அரசும் தமிழ் மக்களை ஏமாற்றிவருகிறது. எங்களுக்கு நடந்தது இனப்படுகொலை, தமிழ் மக்களுக்கு நீதி விசாரணை வேண்டும். அது சர்வதேச நீதி விசாரணையாக இருக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

செம்மணியில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்த அணையா விளக்குப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை கூறினார்.

11

# எமக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரவேண்டும்

## யாழ். மறைமாவட்ட குரு முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூன் 24

தமிழ் மக்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிகளை உலக நாடுகள் அறிந்திருந்தாலும் நீதிக்காக மக்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கவேண்டும் என யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

செம்மணியில் நேற்று ஆரம்பித்த அணையா விளக்கு போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

# மனித புதைகுழிகளை ஐ.நா. கண்காணிக்க இலங்கை அரசு அனுமதியளிக்கவேண்டும்!

## மனித உரிமை ஆணையரின் அழுத்தம் அவசியம் அணையா விளக்குப் போராட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24

செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் கீழ் இயங்கும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்ட அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடவும் தொழில்நுட்ப ரீதியிலான உள்ளீட்டை வழங்கவும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோர்ல்கர் டேர்க் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தவேண்டும் என செம்மணி அணையா

11

# ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை யாழ்.வரவிடாமல் தடுக்க பெரும் சதி!

## அர்ச்சுனா எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 24

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கை வட பகுதிக்கு வரவிடாமல் செய்ய சதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி 'அணையா தீபம்' ஏற்றும் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், அர்ச்சுனா இராமநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அர்ச்சுனா எம்.பி-

இப் போராட்டமானது அரசியலையும் தாண்டி

11

# சாவகச்சேரி பிரதேச சபை தமிழ் அரசுக் கட்சி வசமானது

யாழ்ப்பாணம், ஜூன் 24

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியை சேர்ந்த பொன்னையா குகதாசன் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிர தித் தவிசாளரை தெரிவு செய்வதற்கான

11

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தமிழ் அரசுக் கட்சி வசம்

கிளிநொச்சி, ஜூன் 24

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளராக சுப்பிரமணியம் சுரேன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

11



# 3ஆவது நாளாக நேற்று தொடர்ந்த போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 2400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி நேற்று மூன்றாம் நாளாகவும் அமைதி வழியில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மூன்று நாட்களைக் கடந்தும் தமது உரிமைக் காணி தொடர்பில் அரச தரப்பினர் எவரும் அக்கறை செலுத்தாததால் மக்கள் கவலையுடன் சோர்வாக போராட்டத்தை முன்னெடுத்தனர்.

11

# நேற்றுக் கொழும்பை வந்தடைந்தார் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்

கொழும்பு, ஜூன் 24

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

அவர் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

11

# மழையுடன் கூடிய பலத்து காற்று யாழில் 45 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வீசிய மழையுடன் கூடிய பலத்த காற்று காரணமாக 45 குடும்பங்களைச் சேர்ந்த 159 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களை சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணியில் ஏற்றப்பட்ட 'அணையா தீபம்'.




படங்கள் : த.பிரதீபன்

# செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் முறையான விசாரணையை நடத்துங்கள்!

## அநுரவுக்கு கனேடிய தமிழர் பேரவை கடிதம்

கொழும்பு, ஜூன் 24

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் முறையான விசாரணைகள் செய்யுமாறும் அகழ்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் உண்மையின் பக்கம் நின்று இதனை கையாளுமாறும் கனேடிய தமிழர் பேரவை இலங்கையின் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கு வேண்டுகோள் விடுத்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரியும் மனிதபுதைகுழி அகழ்வை மேற்கொள்ளவும் வலியுறுத்தி ஜூன் 23 தொடக்கம் 25 வரை இலங்கையில் நடக்கும் அணையா விளக்கு போராட்டத்துக்கும் கனேடிய தமிழர் பேரவை தனது ஆதரவைத்தெரிவித்துள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கையின் வடபகுதியில் அரியாலை சிந்துப்பாத்தி மயானத்தில் சமீபத்தில் மனிதப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டமை குறித்து ஆழ்ந்த கரிசனையுடனும் கவலையுடனும் இந்த கடிதத்தை எழுதுகின்றோம்.

சிறுவர்கள் உட்பட பலரின் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளமை தமிழ் சமூகத்தினை மீண்டும் உலுக்கியுள்ளது.

இது தனிப்பட்ட ஒரு சம்பவம் இல்லை. மாறாக பல தசாப்த கால காணாமல்போதல், அரச பயங்கரவாதம்,பதில்கள் இன்றி பொறுப்புக் கூறல் இன்றி தமிழ் குடும்பங்கள் அனுபவித்துவரும் துயரங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமை ஆகியவற்றின் துயரம் மிகுந்த பாரம்பரியமாகும்.

கடந்த 25 வருடங்களாக செம்மணி தமிழ் சமூகத்தின் கூட்டு மனப்பான்மையை கடுமையாக பாதித்து வந்துள்ளது.இந்தப் பகுதி நம்பகத்தன்மை மிக்க ஆதாரங்கள் , படுகொலைகள் குறித்த குற்றச்சாட்டுகள்,இரகசியமாக உடல்கள் புதைக்கப்படுதல் ஆகியவற்றுடன் நீண்ட காலமாக தொடர்புபட்ட பகுதியாகும்.

அதன் மோசமான தன்மை குறித்து தெரிந்திருந்தாலும் சிறிய பகுதியே தோண்டப்பட்டுள்ளது.மேலும் மனித புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகள் உரிய காரணங்கள் தெரிவிக்கப்படாமல் இடையில் நிறுத்தப்பட்டன.

மன்னார் ,கொக்குதொடுவாய், திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழிகள் முழுமையாக தோண்டப்படாததும், தெளிவற்ற விசாரணைகளும், தமிழ் மக்களின் நம்பிக்கைகளை மோசமாக பாதித்துள்ளன.

நீதியை உறுதி செய்வதற்காக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் இந்த சமீபத்தைய கண்டுபிடிப்பு உண்மைக்கான மற்றுமொரு வாய்ப்பு தவறவிடப் படுதலாக அமையும்.

மனித உரிமை நீதிக்காக தன்னை அர்ப்பணித்துள்ள அமைப்பு என்ற அடிப்படையில் இந்த தருணத்தை தீவிரமாக கருதுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் அலுவலகத்தை வெளிப்படையான முழுமையான மனித புதைகுழிகளை தோண்டும் கட்டமைப்பை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அது தெளிவான காலவரையறை, முறையியல், பொதுமக்களுக்கு அறிவித்தல் ஆகியவற்றை கொண்டிருக்கவேண்டும்.

சர்வதேச தடயவியல் நிபுணர்களையும் மனித உரிமை நிபுணர்களையும் அகழ்வு ஆய்வின் ஒரு பகுதியாகயிருப்பதற்கு அழையுங்கள்.

காணாமல்போனவர்களின் குடும்பத்தவர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பை உறுதிசெய்யுங்கள்.

தலையீடுகள் அல்லது ஆதாரங்களை தங்களிற்கு சாதகமாக மாற்றுதல் ஆகியவற்றை தவிர்ப்பதற்காகஅந்த பகுதியில் பணியாற்றுபவர்களுக்கு போதுமான வளங்களையும் பாதுகாப்பையும் வழங்குங்கள் - என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.06.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

## ஐ.நாவின் நிலை

இஸ்ரேல் - ஈரான் போர் தீவிரமடைகின்றது. ஈரானிய அணு உலைகள் மீதான அமெரிக்கத் தாக்குதலைத் தொடர்ந்து நிலைமை இன்னும் சிக்கலடைந்துள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கை வந்திருக்கின்றார். இது ஏற்கனவே திட்டமிடப்பட்ட விஜயம். இந்த விஜயத்தின் போது. பேரவையின் முன்னைய ஆணையாளர்கள் போல் அரசாங்க பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரை அவர் சந்திக்கவுள்ளார்.

ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் பின்புலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைமையோ திரிசங்கு நிலையாகிருக்கின்றது. இதுவரையில் இஸ்ரேலை பலரும் கண்டித்துக் கொண்டிருந்த நிலையில் அமெரிக்காவே நேரடியாக தாக்குதலில் இறங்கியிருக்கின்றது. ஜனாதிபதி ட்ரம்பின் முதலாவது காலப்பகுதியில் ஈரானின் பெரும் தலைவர் அயதுல்லா கொமேனியின் வலதுகரமான காசிம் சுலைமானி அமெரிக்க உளவுத்துறையில் கொல்லப்பட்டார். அதற்கான உத்தரவை ட்ரம்ப் பிறப்பித்திருந்தார்.

ஒரு வேளை ட்ரம்ப் அடுத்த தவணையும் வெற்றிபெற்றிருந்தால் தற்போது நடைபெறும் தாக்குதல் அப்போதே நடந்திருக்கும். ஏனெனில், ஈரானின் அணுவாயுத நகர்வை அமெரிக்கா தொடர்ந்தும் அனுமதிக்கத் தயாராக இருக்கவில்லை. அதேவேளை அண்மைக்காலமாக சீனாவும் மத்திய கிழக்கில் சத்தமின்றி செல்வாக்கை பலப்படுத்தும் முயற்சியில் இறங்கிவிட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஈரானின் மீதான தாக்குதலில் அமெரிக்கா நேரடியாக இறங்கியிருக்கின்றது.

இஸ்ரேல் - ஈரான் மோதலை ட்ரம்ப் நிர்வாகம் பழம் நழுவிப் பாலில் விழுந்திருக்கும் ஒரு வாய்ப்பாகவே கருதுவதாகத் தெரிகின்றது. அமெரிக்கத் தாக்குதலை எவர் கண்டித்தும் பயனில்லை. ஏனெனில், அமெரிக்கா அதன் நகர்வுகளை நிறுத்தப் போவதில்லை. அதன் இலக்கை பூர்த்தி செய்து விட்டே அமைதியடையும். வழமைபோல் ஐக்கிய நாடுகள் சபை பார்வையாளராக அதன் கடமையை நிறைவு செய்யும்.

யுத்தங்களின் போது ஐக்கிய நாடுகள் சபை வெறும் பார்வையாளராகவே இருப்பதுண்டு. இப்போதும் அடிப்படித்தான் - எப்போதும் அப்படித்தான். இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர் தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் யுத்தங்களை தடுக்க முடியாத பார்வையாளர் சபையாகவே இருந்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்னும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் கூட, அதனை செய்ய வேண்டுமானாலும் பலம்பொருந்திய நாடுகளின் அனுமதி தேவை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் எழும் பிரதான கேள்வி - நீதி கோரும் மக்கள் ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்து அதிகம் எதிர்பார்ப்பது சரியானதா? இறுதி யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களை கைவிட்டு ஐ.நா அமைப்புக்கள் வெளியேறின. இறுதி யுத்தத்தின் போது. இலங்கை விவகாரங்களுக்கான ஐ.நாவின் பேச்சாளராக இருந்த கோடன் வைஸ், 'கூண்டு' என்னும் பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். இது போன்ற யுத்தங்கள் என்னை பாதிப்பதில்லை, நான் எனது மொட்டை மாடியிலிருந்து அடுத்த நூலுக்கான குறிப்புக்களை எடுத்துக் கொண்டிருக்கின்றேன் என்று எழுதியிருந்தார்.

கோடன் வைஸ் கூறுவது அவருக்கு மட்டும் உரித்தான ஒன்றல்லமாறாக, ஐ.நாவே அவ்வாறுதான் இருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலாளர் நாயகமான சார்ள்ஸ் பெட்ரே, அதிகம் ஐ.நாவை நம்புவதை விடுத்து உங்களுடைய சொந்த செயல்பாடுகளின் கவனம் செலுத்துங்கள் என்றும் கூறியிருக்கின்றார். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரினால் அற்புதங்கள் நிகழப் போவதில்லை. ஆனாலும், அவரை சந்தித்து சொல்ல வேண்டியதை தமிழ் தரப்புக்கள் சொல்லத்தான் வேண்டும். ஆனால், அளவு கடந்த நம்பிக்கை வைத்துவிட்டு, பின்னர் ஏமாற்றங்களை வெளியிடுவதுதான் தவறானது.

## கரவெட்டியில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜூன் 24

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப் பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் இருபத்தைந் தாவது நிகழ்வு இம் மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கரவெட்டி பிரதேசத்தில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

27.06.2025 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் தொடக்க நிகழ்வாக 'ஈழத்து நூல்களை அறிவோம்' என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் நினைவு அரங்கில் யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல்களின் அறிமுக உரை களை வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் 'பாட்டி சொன்ன கதைகள்' சிறுவர் இலக்கியம் தொடர்பில் பாடசாலை மாணவன் மகேஸ்வரன் அன்றூவும், புவனா இராஜ ரட்ணத்தின் 'சிறுவருக்கான வில்லிசை நாடகங்கள்' புத்தகம் பற்றி மன்/அகத்தி முறிப்பு அ.மு.க. பாடசாலை அதிபர் த. சுதனும், சோ.தேவராஜாவின் 'வள்ளுவர் வாழ்வியம்' நூல் தொடர்பாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமாரும், நந்தன வீரரத்னவின் 'யாழ்ப்பா ணத்தை தீயிடுதல்' நூல் தொடர்பாக ஆய்வாளர் சி.விமலனும் ஆற்றவுள்ளதுடன், நிகழ்ச் சித்தொகுப்பினை மாணவர் ஜெகதீஸ்வரன் அபில்சனும் மேற்கொள்ளவுள்ளனர்.

விசேட கலை நிகழ்வுகளாக செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் தயாரிப்பில் சீலனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'எங்கே எங்கே குடை எங்கே?', 'எலியார் எங்கே போனார்?' ஆகிய சிறுவர் நாடகங்களும் இடம்பெறவுள்ளன.

மேலும் இந் நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக் கது.

இந் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரை யும் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

## எரிபொருளை பதுக்கவேண்டாம்!

கொழும்பு, ஜூன் 24

தேவையில்லாமல் எரிபொருளை பதுக்கி வைப்பதைத் தவிர்க்குமாறு பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் சூழ்நிலை காரணமாக எதிர்காலத்தில் பெற்றோலிய விலைகள் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக சங்கத்தின் துணைத் தலைவர் குசும் சந்தனாயக்க தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வாறான போர் சூழல் ஏற்பட்டால் எரிபொருள் இல்லாமல் போகாது. விலைகளில் மட்டுமே மாற்றம் ஏற்படும்.

இது எங்களுடைய பிரச்னை அல்ல. உலகின் சக்திவாய்ந்தவர்களின் பிரச்னையாகும்.

அடுத்த சில மாதங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் ஏற்கனவே செய்து வருகின்றது - என்றார். (அ)

## அராலி பேச்சியம்பாள் ஆலய கப்பல் திருவிழா!



யாழ்ப்பாணம், ஜூன் 24


அராலி மேற்கு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார வேள்வி உற்சவத்தின் 6ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் முத்துச் சப்பரத் திருவிழாவானது சிறப்பாக நடைபெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் பேச்சியம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து வசந்த மண்டப பூஜைகள் நடைபெற்றன. பின்னர் பேச்சியம்பாள் கப்பலில் எழுந்தருளியாக வீற்றிருந்து வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதன் போது வாண வேடிக்கைகளும் இடம்பெற்றன.

ஆலயக் கிரியைகளை துஷ்யந்தக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடாத்தி வைத்தனர். பல பாகங்களிலும் இருந்து வருகைதந்த பக்தர்கள் அம்பாளை தரிசித்து இஷ்ட சித்திகளை பெற்றுச் சென்றனர்.

(அ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன் - மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தில் சலசலப்பு வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. லேசாக தலை வலிக்கும்.

**கடகம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். புது பொருள் வந்து சேரும்.

**சிம்மம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர்நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.பொறுமைத் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறகும். வாகனத்தில் கவனம் தேவை. விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**மகரம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். புதுவேலை கிடைக்கும். பழையகடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

# புதூர் நாகதம்பிரான் ஆலய பிரதான வீதிக்கு காப்பெற் இடப்பட்டு நேற்று திறந்து வைப்பு

வவுனியா, ஜூன் 24

வரலாற்று சிறப்பு மிக்க வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய பிரதான வீதிக்கு காப்பெற் இடப்பட்டு நேற்றுக் காலை பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரனால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நேற்றைதினம் நடைபெற்றது. இந்த நிலையில் சிரமமின்றி பயணத்தை மேற்கொள்வதற்காக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின்



கீழ் 24 மில்லியன் ரூபாய் செலவில் 1. 75 கிலோ மீற்றருக்கு காப்பெற் இடப்பட்டுள்ளது. (எ-10)

# மாணவர் ஒன்றிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக் கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் மரநடுகையும் நேற்று முன்தினம் சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

அந்த வகையில் ஒன்றியத்தின் தலைவராக ச. பிரசாந், செயலாளராக கோ. பவியா, பொருளாளராக கு. சுலக்சனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து கலைமகள் இலவசக்கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மரநடுகையும், பூமர கன்றுகள் விநியோகமும் கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைமகள் இலவசக் கல்வி நிலைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# சாதனையாளர் கௌரவிப்பு




யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம், சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் விக்ரோறியா கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது விளையாட்டுக் கழகத்தின் தலைவராக இருந்து, வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட சண்முகநாதன் ஜெயந்தன் கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, தேசிய மட்டத்தில் வேக நடைப்போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்ற ஜீலேஸ்வரன் தமிழரசி மற்றும் அவரின் பெற்றோர்களுக்கும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், விக்ரோறியா கல்லூரி அதிபர், முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பிரதேச மக்கள் கலந்து கொண்டனர். (எ)

# சத்துள்ள உணவு சிறுவர்களுக்கான உரிமை சாவகச்சேரியில் விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம் ஜூன் 24

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையுடன் வேள்ட் விஷன் லங்கா நிறுவனம் நடத்திய "சத்துள்ள உணவு சிறுவர்களுக்கான உரிமை" எனும் விழிப்புணர்வு நடைபவனியும் விழிப்புணர்வு நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சாவகச்சேரி நகர சபைக்கு முன்பாக ஆரம்பித்த இந்த நடைபவனி சாவகச்சேரி பேருந்து நிலையம் வரை சென்றது.

தொடர்ந்து அங்கு வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவர்களால் விழிப்புணர்வு வீதி நாடகமும் ஆற்றுகை செய்யப்பட்டது.

பின்னர் அங்கிருந்து ஆரம்பமான நடைபவனி சாவகச்சேரி கலாசார மண்டபத்தை சென்றடைந்தது.

இதன்போது, விழிப்புணர்வு சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்



கள் வழங்கப்பட்டதோடு, பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் அரச கொள்கை நியமங்களை உறுதியாக செயல்படுத்த வேண்டி மாணவர்களால் கையொப்பமிடப்பட்ட விண் ணப்பக் கோரிக்கையும் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் இந்த செயல்திட்டத்துக்கு ஆதரவு வழங்கினர்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை தொடரவேண்டும்!

## விஜயதாச ராஜபக்ஷ கருத்து



கொழும்பு, ஜூன் 24

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீக்கும் என நான் நம்பவில்லை. அம்முறையை தொடரவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பும்கூட என்று முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என சந்திரிக்கா அம்மையார் உறுதியளித்தார். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. பின்னர் மஹிந்தவும் வாக்குறுதி அளித்தார். அதற்கமைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவில்லை.

நல்லாட்சி காலத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் சில மட்டுப்படுத்தப்பட்டன. அதுவும் எமது அழுத்தங்களால் தான் நடந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஜனாதபதி அநுரகுமார திஸாநாயக்க நீக்குவார் என நான் நம்பவில்லை. அதேபோல நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு நான்கூட எதிர்ப்பு தெரிவிக்கின்றேன்-என்றார்.

# மானிய விலையில் தேங்காய் உரம் வழங்குவதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 24

தென்னை உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் தேங்காய் உரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் உள்ள சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபை ஆகியவை இணைந்து சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பலுகஸ்வெவ தோட்டத்தில் இதற்கான நிகழ்வு நடைபெற்றுள்ளது.

மானிய விலையில் தேங்காய் உரத்தை வழங்கும் தேசிய திட்டத்திற்கு இணங்க தென்னை பயிர்ச்செய்கை சபை 146 தென்னை செய்கையாளர்களுக்கு 30 மெற்றிக் தொன் தேங்காய் உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. (அ)

# அனைத்துச் சிறைச்சாலை பிரதானிகளுக்கும் அழைப்பு

கொழும்பு, ஜூன் 24

நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலை பிரதானிகளும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நீதியமைச்சரின் தலைமையில் நீதியமைச்சில் நேற்று இடம்பெறவுள்ள கலந்துரையாடலுக்காக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

இதற்கமைய நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளின் அத்தியட்சகர்கள் மற்றும் ஆணையாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (அ)

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய முன்னாள் உபபொலிஸ் பரிசோதகர் கைது!

கொழும்பு, ஜூன் 24

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் நாரஹேன்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாரஹேன்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கொழும்பு, நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அயகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் ஆவார்.

சந்தேக நபர் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் வீடொன்றின் கதவை உடைத்து ஒரு இலட்சத்து 36 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடுதல் மற்றும் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் கதவை உடைத்து 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடுதல் உள்ளிட்ட பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# கட்சி இன, மத பேதங்கள் இல்லாது நகரை வெற்றி பெறச் செய்வோம்!

கொழும்பு, ஜூன் 24

இன, மத, மொழி பேதங்களைக் கடந்து மக்களுக்கு சேவையாற்றவே நாங்கள் இங்கு தெரிவு செய்யப்பட்டோம், ஆகவே நாம் அதனை மிகச் சிறப்பாக செய்து முடிப்போம் என கொழும்பு மாநகர சபையின் முதல்வர் வ்ராய் கெலி பல்தசார் தெரிவித்தார்.

வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக கொழும்பின் முக்கிய தேர்தல் தொகுதிகளில் மக்கள் சந்திப்பு கூட்டத் தொடரின் ஓர் அங்கமாக கொழும்பு 10 மாளிகாவத்தை - கெத்தாராமை பிரிவில் உள்ள மக்களை சந்தித்து நன்றி தெரிவிக்கும் வேளையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பாரம்பரிய அரசியலே செய்கிறது!

## சமிந்த விஜயசிறி எம். பி.



கொழும்பு, ஜூன் 24

நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏமாற்றியிருக்கிறது. அதிகாரத்துக்காக கள்வர்கள் என விமர்சித்தவர்களுடனேயே கூட்டணி அமைத்துள்ளது. இந்த அரசாங்கமும் பாரம்பரிய அரசியலிலேயே ஈடுபடுகிறது என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தம்மை நம்பி வாக்களித்த மக்களை இந்த அரசாங்கம் ஏமாற்றியுள்ளது.

70 ஆண்டுகள் நாட்டுக்கு சாபம் எனக் கூறிய வர்களுடன் இணைந்து இன்று இந்த அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைத்திருக்கிறது. அதிகாரத்துக்காக கள்வர்கள் என விமர்சித்தவர்களுடன் இந்த அரசாங்கம் கூட்டணியமைத்துள்ளது. புதிய அரசியல் கலாசாரத்தை எதிர்பார்த்த மக்களுக்கு அரசாங்கம் ஏமாற்றத்தையே வழங்கியிருக்கிறது.

அதிகாரத்தைப் பெறுவதற்காக பொய் கூறி மக்களை ஏமாற்றினர.

ஆனால் இன்று அதிகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் சம்பிரதாயபூர்வ அர சியலேயே தேசிய மக்கள் சக்தியும் ஈடுபட்டுள்ளது. கடந்த அரசாங்களின் ஊழல், மோச டிகள் தொடர்பில் ஜே.வி.பி.யினர் பாரிய பிரசாரங்களை முன்னெடுத்தனர். ஆனால், இன்று இந்த அரசாங்கத்தின் கீழ் உப்பு மோசடி, அரிசி மோசடி என்பன இடம்பெற் றுள்ளன.

கடந்த அரசாங்கங்களையே இந்த அராசங்கமும் பின்பற்றுகின்றது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மோசடிகளைக் கட்டுப்படுத்தி அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகளைக் குறைப்பதாகக் கூறிய அரசாங்கம் இன்று முன்னர் காணப்பட்டதை விட உணவு பொருட்களின் விலைகளை பன் மடங்கு அதிகரித்திருக்கின்றது.

கெஹலிய ரம்புக்வெலவை காண்பித்து ஊடக பிரசாரங்களை முன்னெடுத்து, ஏனைய பிரச்சினைகளை மறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. நிறைவேற்றதிகார ஜனாதிபதியையும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வைத்துக் கொண்டு இந்த அரசாங்கம் உறங்கிக் கொண்டிருக்கிறது-என்றார். (ஐ)

# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு இந்தியாவரை இலவச விமான பயணம்!



கொழும்பு, ஜூன் 24

இந்திய அரசாங்கத்தின் இலவச விமான பயண வசதிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் நாடு திரும்புவதற்கு எதிர்பார்க்கும் இலங்கை பிரஜைகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பதிவு செய்வதற்கான செயற்பாடுகள் நேற்றும் இன்றும் மாத்திரம் முன்னெடுக்கப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

ஜோர்தானின் அம்மான் நகரிலிருந்து இந்தியாவின் புதுடில்லி நோக்கிச் செயற்படுத்தப்படவுள்ள இந்த விமானங்களில் இலங்கையர்களுக்காக சில ஆசனங்களை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த விமானங்களில் பயணிக்க எதிர்பார்ப்பவர்களுக்கு இஸ்ரேலின் - டெல் அவிவ் நகரிலிருந்து ஜோர்தானின் அம்மான் நகருக்கு செல்வதற்கு இலவச போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் எனவும் நிமல் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

ஜோர்தானிலிருந்து இந்தியாவின் புதுடில்லிக்கான விமான சேவைக்கும் கட்டணம் அறவிடப்படமாட்டாது எனவும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியிருந்து கொழும்புக்கு வருகை தருவதற்காக அவர்கள் கட்டணம் செலுத்தி விமான பயணச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

விமான பயணங்களின் போது உரிய நாடுகளின் தூதரகங்களினூடாக அதற்கான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். (அ)

# ஏதேச்சாதிகார வழியில் பயணிக்கின்றது அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 24

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏதேச்சாதிகார வழியில் பயணித்துக்கொண்டிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தை விமர்சிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக சேறுபூசும் பிரசாரம் முன்னெ டுக்கப்பட்டுவருகின்றது. இதுகூட ஒருவகையிலான அரசியல் அழுத்தம்தான். இதற்கு நாம் அஞ்சமாட்டோம். அரசாங்கம் தவறிழைத்தால் அதனை முதுகெலும்புடன் சுட்டிக்காட்டுவோம்.

இந்த அரசாங்கம் ஏதேச்சாதிகார வழியில் பயணிப்பதற்கு முற்படுகின்றது. இதனை தடுப்பதற்கு முற்படும் அனைத்து தரப்பினரும் ஒடுக்கப்படுகின்றனர். இதனை நாட்டு மக்களும் விரைவில் புரிந்துகொள்வார்கள்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி!

## இலங்கை அரசு திட்டம்

கொழும்பு, ஜூன் 24

**மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்து வருவதாலும், எரிபொருள் விநியோகச் சங்கிலியில் மேலும் சீர்குலைவு ஏற்படும் என்ற கவலைகளாலும், நைஜீரியாவிலிருந்து பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய இலங்கை முடிவு செய்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

இந்த நிலைமை குறித்து கருத்து தெரிவித்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ. ராஜகருணா, நைஜீரியா மற்றும் வேறு சில எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து மாதிரிப் பொருட்களைப் பெற்று, உள்ளூர் ஆய்வகங்களில் நம்பகத்தன்மைக்காக சோதிக்குமாறு தனது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாக தெரிவித்தார்.

பாரம்பரிய விநியோகச் சங்கிலியில் ஏற்படும் இடையூறுகளிலிருந்து இலங்கைக்கு ஏற்படும் எந்தவொரு தாக்கத்தையும் தடுக்கும் முயற்சியாக இந்த நடவடிக்கை இருக்கும் என்று அவர் கூறினார்.

எரிபொருள் விநியோகத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கிட்டத்தட்ட 60 சதவீதத்தைக் கொண்டுள்ளது. மீதமுள்ளதை சினோபெக், லங்கா இந்தியன் ஒயில் கம்பனி மற்றும் ஆர்.எம். பார்க்ஸ் ஆகியவை பங்களிக்கின்றன என்று அவர் கூறினார்.

உள்ளூர் சந்தையில் உடனடி தாக்கம் எதுவும் ஏற்படாது என்று கூறிய அவர், தற்போதைய உலகளாவிய சீர்குலைவின் விளைவு இந்த ஆண்டு ஒகஸ்ட் அல்லது செப்ரெம்பர் மாதத்துக்குள் உணரப்படும் என்றார்.

ஆபிரிக்க கண்டத்தில் எண்ணெய் உற்பத்தி செய்யும் முக்கிய நாடு நைஜீரியா ஆகும்.

இதற்கிடையில், ரஷ்யா இலங்கையுடன் எண்ணெய் வர்த்தகத்தை வழங்க முன்வந்துள்ளது. இருப்பினும், பொருளாதாரத் தடைகள் மற்றும் அரசியல் பிரச்னைகள் காரணமாக ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதை ராஜகருணா நிராகரித்தார். (அ)

# இலங்கை-சீனா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்!

கொழும்பு, ஜூன் 24

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையின் ஒத்துழைப்புக்காக இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிருஷாந்த அபேசேனவும், சீனாவின் சார்பாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் இன் ஹெஜுனும் கையெழுத்திட்டனர்.

இரு நாடுகளும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் எனவும், இந்தத் துறையில் உலகளாவிய சவால்களுக்குத் தீர்வுகளைக் கண்டறியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# மாத்தளை, களுத்துறை மாநகர சபைகள் அரசிடம்!

கொழும்பு, ஜூன் 24

மாத்தளை மற்றும் களுத்துறை மாநகர சபைகளில் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை நிலைநாட்டியுள்ளது.

12 வாக்குகளைப் பெற்று தேசிய மக்கள் சக்தியின் அசோக கொட்டஹச்சி மாத்தளை மாநகர சபையின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதற்கிடையே, 17 வாக்குகளைப் பெற்று தேசிய மக்கள் சக்தியின் தனோஜ் சோமரத்ன களுத்துறை மாநகர சபையின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (அ)

# அரிசியை இறக்குமதி செய்யும் நிலை வரும்!

கொழும்பு, ஜூன் 24

பெரும்போக நெற்செய்கையின்போது எதிர்பார்த்தளவு விளைச்சல் கிடைக்காமையினால் எதிர்வரும் காலங்களில் அரிசியை இறக்குமதி செய்வதற்கான நிலை ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கருத்துரைத்த பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மரம்பே இதனைக் கூறினார்.

இதன்படி 350,000 மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், இந்த விடயம் தொடர்பில் விவசாயம் மற்றும் கால்நடைகள் பிரதியமைச்சர் நாமல் கருணாரத்னவிடம் வினவியபோது, இதுவரை அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என தெரிவித்தார்.



பேராசிரியரின் கூற்று கணிப்பு மாத்திரமே என்றும் அடுத்த சில வாரங்களில் சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, நாட்டின் சில பகுதிகளில் சிறுபோகத்துக்காக பயிரிடப்பட்ட நெல் செழிப்பாக வளர்ச்சியடையவில்லை என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சிறுபோக நெற்செய்கைக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உரத்தின் தரத்தில் ஏற்பட்ட மாற்றமே இதற்கு காரணம் என விவசாயிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (அ)

# ஈரான்-இஸ்ரேல் மோதலினால் பாதிப்பு: அரசின் முன்னாயத்த திட்டங்கள் எவை?

## கேள்வி எழுப்புகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 24

ஈரான்-இஸ்ரேல் மோதலானது இலங்கை போன்ற சிறிய நாடுகளின் பொருளாதாரத்தில் நேரடியாக பாதகமான தாக்கத்தை செலுத்தும். அவற்றை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே முன்னாயத்தங்களை செய்ய வேண்டும். ஆனால் அராசங்கத்திடம் அவ்வாறு எவ்வித முன்னாயத்தங்களும் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-ஈரான்-இஸ்ரேல் மோதல் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி துறையில் நேரடியாக பாதகமான தாக்கத்தை செலுத்தும்.

எமது நாட்டின் தேயிலை ஏற்றுமதியில் ஈரான் முன்னிலையிலுள்ளது. அது மாத்திரமின்றி மத்திய கிழக்கில் எரிபொருள் விநியோகத்தில் ஈரான் பிரதான பங்கினை வகிக்கிறது. மறுபுறம் இஸ்ரேலில் அதிகளவான இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர்.

இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல்களால் எம்மைப் போன்ற சிறிய நாடுகளின் பொருளாதாரம் பாரியளவில் பாதிக்கப்படும்.

அத்தோடு டொலர் நெருக்கடியும் ஏற்படும். எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு முன்னாயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது எனக் கேள்வியெழுப்புகின்றோம்.

இவ்வாண்டு இதுவரையான காலப்பகுதியில் அரசாங்கம் அரச வருவாயில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடையவுமில்லை. அதேவேளை பொருளாதார வளர்ச்சி வேகம் 4.6 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

2026ஆம் ஆண்டாகும்போது இது 3 வீதமாக வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது. இவ்வாறிருக்கையில் 2027ஆம் ஆண்டின் பின்னர் நாம் எவ்வாறு வாக்குறுதியளித்தவாறு கடன் மீள செலுத்துவோம்?

உலக யுத்த நிலைமையும், அமெரிக்காவின் பொருளாதார பின்னடைவும் இலங்கைக்கு சிறந்த வாய்ப்பாகும் என அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி குறிப்பிடுகின்றார்.

அது எவ்வாறு என்று எமக்கு புரியவில்லை. எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டால் ஏனைய அனைத்து பிரச்னைகளும் இயல்பாகவே அதிகரிக்கும். தற்போது உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்து வருகிறது.

இது எவ்வாறு இலங்கைக்கு சாதகமாகும்? அரசாங்கத்தின் அறிவற்ற கருத்துக்களால் இறுதியில் நாட்டு மக்களே பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிடும்-என்றார். (அ)

# பிள்ளையான் வழக்கால் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்!

கொழும்பு, ஜூன் 24

சட்ட மாஅதிபர் திணைக்கள பணியாளர்கள் மீது சமூக ஊடகங்களில் பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாக சட்ட மா அதிபர் பரிந்த ரணசிங்க அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பதவி உயர்வுக்காக காத்திருக்கும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிள்ளையான் எனப்படும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு பிணை வழங்குவதை ஆதரித்ததாக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் மீது சமூக ஊடகங்களில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம்,

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக் கோன் தொடர்பான வழக்கில், சிரேஷ்ட அதிகாரிக்கு பதிலாக கனிஷ்ட அதிகாரியொருவரை சட்ட மா அதிபர் திணைக்களம் பிரதிநிதித் துவப்படுத்தியதாக வும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

சட்ட மா அதிபர் திணைக்களம் இதுவரை 600 இற்கும் மேற்பட்ட குற்றப்பத்திரிகைகளை மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிலையில், சமூக ஊடகங்கள் மூலம் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு எதிராக இதுபோன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# தினமும் முட்டை விலை குறித்து அறிவிக்கப் புதிய பொறிமுறை!

கொழும்பு, ஜூன் 24

சமூக ஊடகங்கள் மூலம் தினமும் முட்டை விலை குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்காக பொறிமுறை ஒன்றை அமைக்க அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இடைத்தரகர்கள் முட்டைகளை விற்பனை செய்வதன் மூலம் பெரும் இலாபத்தை பெறுகின்றனர்.

இதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். சந்தையில் தற்போது முட்டை ஒன்று 28 ரூபாய் முதல் 32 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் கடந்த சில மாதங்களாக, முட்டை அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டது.

முட்டை விலை உயர்வுக்கு இடைத்தரகர்களின் செயல்பாடுகளும் ஒரு காரணம் என்று பல தரப்பினரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த நிலையில், மேலும் முட்டை விலை அதிகரிப்பதைத் தடுக்கும் வகையில், சமூக ஊடகங்கள் மூலம் தினமும் முட்டை விலை குறித்து பொது மக்களுக்குத் தெரிவிக்க பொறிமுறை ஒன்றை அமைக்க முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் கணவர் அப்பாவி"

## மகிந்தானந்தாவின் மனைவி பதிவு

கொழும்பு, ஜூன் 24

முன்னாள் விளையாட்டு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் மனைவியும், மறைந்த பிரதமர் டி.எம். ஜயரட்னவின் மகளுமான செனானி ஜயரத்ன, அண்மையில் ஒரு பெரிய ஊழல் வழக்கில் தனது கணவர் தண்டிக்கப்பட்டதை கண்டித்து சமூக ஊடகத் தளத்தில் ஒரு பதிவொன்றை இட்டுள்ளார்.

மகிந்தானந்த அளுத்கமகேயின் அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கம் வழியாகப் பகிரப்பட்ட ஒரு நீண்ட பதிவில் அவர், தனது கணவர் நிரபராதி என்றும், தற்போதைய தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் சட்ட செயல்முறை அரசியல் ரீதியாக செல்வாக்கு செலுத்தப்பட்டதாகவும் குற்றம் சாட்டினார்.

அதேநேரம், நீதி அமைச்சரின் அண்மைய கருத்தையும் அவர் கேள்வி எழுப்பினார். ஆட்சியில் இல்லாவிட்டால் அத்தகைய தீர்ப்பு வழங்கப்பட்டிருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனது கணவர் மீது ஆதார மற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அரச நிதியில் இருந்து ரூ.53 மில்லியன் மோசடி செய்ததாக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் அளுத்கமகேயுக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதே வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கும் 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

2015 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொது நிதியைப் பயன்படுத்தி கரம் போர்ட்களை விநியோகித்தது தொடர்பான குற்றச்சாட்டுகள் இந்த வழக்கில் அடங்கும். (அ)

## ஜா எலவில் கேரள கஞ்சா மீட்பு

கொழும்பு, ஜூன் 24

ஜா எல, கொட்டுகோட பகுதியில் ஒரு பாழடைந்த வீட்டில் இருந்து ரூ. 25.8 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள கேரள கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதாக கொழும்பு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

5 உரப் பைகளில் அடைக்கப்பட்டிருந்த 129 கிலோ 245 கிராம் கேரள கஞ்சா, அந்த வீட்டிலிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கொழும்பு குற்றப்பிரிவின் மாகாண ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பஸ்னாவே உள்ளிட்ட அதிகாரிகள் குழு, ஜா எலவில் உள்ள ஏக்கல பகுதிக்குச் சென்றிருந்தனர்.

ஜா எலவில் உள்ள கொட்டுகோட பகுதியிலுள்ள வீட்டுத் தோட்டத்தில் கூரை இல்லாத ஒரு பாழடைந்த வீட்டை ஆய்வு செய்தபோது, ஐந்து உரப் பைகளில் அடைக்கப்பட்டிருந்த போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (அ)

## அம்பாந்தோட்டை, புத்தள சபைகள் சஜித் அணியிடம்!

கொழும்பு, ஜூன் 24

எதிர்க்கட்சி பெரும்பான்மையாக இருந்த அம்பாந்தோட்டை மாநகர சபை மற்றும் புத்தள பிரதேச சபைகளின் அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

அதன்படி, அம்பாந்தோட்டை மாநகர சபையின் புதிய மேயராக ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் டி.ஏ. காமினி பெரும்பான்மை வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டார்.

அதேபோல, புத்தள பிரதேச சபையின் புதிய தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ராஜிக சதுரங்க தெரிவு செய்யப்பட்டார். (அ)

## சஜின் வாஸீக்கு பிடியாணை

கொழும்பு, ஜூன்

சுமார் 3.69 மில்லியன் ரூபாய் வருமான வரி செலுத்தாததற்கு எதிராக உள்நாட்டு வருவாய் ஆணையர் தாக்கல் செய்த வழக்கில் ஆஜராகத் தவறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவை கைது செய்து ஆஜர்படுத்த கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை பிடியாணை பிறப்பித்துள்ளது.

2010-2012 ஆண்டுகளுக்கு சஜின் வாஸ் குணவர்தன வருமான வரி செலுத்தாமை தொடர்பாக உள்நாட்டு வருமானவரி ஆணையர் 2023 ஆம் ஆண்டு இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.



மேலும் வழக்கு தொடுப்பவர் தரப்பில் ஆஜ ரான தினேஷ் பெரேரா, பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதாகவும் ஆனால் நீதிமன்றத்தில் ஆஜ ராகவில்லை என்றும் கூறியுள்ளார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த மேலதிக நீதிபதி பவித்ரா சஞ்சீவனி பதுராஜா, பிரதிவாதியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவிட்டு பிடியாணை பிறப்பித்துள்ளார். (அ)

அரசியல்வாதிகளின் சொத்துகள்

# விசேட விசாரணையை ஆரம்பித்துள்ள சி.ஐ.டி!

கொழும்பு, ஜூன் 24

**கொழும்பில் ஆடம்பர சொத்துக்களை வைத்திருக்கும் பல அரசியல்வாதிகள் மீது விசேட விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.**

குற்றப் புலனாய்வுத்துறையின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவால் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பொலிஸாரின் கூற்றுப்படி, விசாரணைக்கு உட்படுத்தப்படும் அரசியல்வாதிகளில் பல முக்கிய முன்னாள் அமைச்சர்களும் அடங்குவர்.

தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் உட்பட 28 அரசியல்வாதிகளின் சொத்துக்கள் குறித்து சி.ஐ.டி விசாரணையைத் தொடங்கியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஒருவரிடமும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக அறிக்கை கூறுகிறது.

சட்டவிரோதமாகச் சம்பாதித்த சொத்துக்கள் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட பல முறைப்பாடுகளின் அடிப்படையில் சி.ஐ.டி விசாரணையைத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 24

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் 23 அட்டைப் பெட்டிகளில் மொத்தம் 5,000 வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகளை கடத்தியதற்காக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தின் விமான நிலையப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் நேற்று முன் தினம் இரவு நடத்தப்பட்ட சோதனையின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் நிட்டம்புவ பகுதியைச் சேர்ந்த 30 வயது டையவர்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (அ)

## அக்மீமன பகுதியில் துப்பாக்கி சூடு!

கொழும்பு, ஜூன் 24

காலி, அக்மீமன பகுதியில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

அக்மீமன பகுதியின் வெவேகொடவத்தை, திசாநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள வீடொன்றின் மீதே நேற்று அதிகாலை 05.00 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த துப்பாக்கிச் சூடு குறித்து காலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## 192 உள்ளூராட்சி சபைகள் தேசிய மக்கள் சக்தி வசம்!

கொழும்பு, ஜூன் 24

தேசிய மக்கள் சக்தி இப்போது இலங்கை முழுவதும் 192 உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டைப் பெற்றுள்ளது.

இவற்றில், 151 தேசிய மக்கள் சக்தி நிர்வாகங்களில் நேரடி பெரும்பான்மையைப் பெற்றது.

அதே நேரத்தில் அவர்கள் 41 பிற மன்றங்களில் தேர்தலுக்குப் பிந்தைய பெரும்பான்மையைப் பெற்று நிர்வாகங்களை அமைத்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி கொழும்பு, களுத்துறை, காலி, குருநாகல், புத்தளம் மற்றும் நுவரெலியா உட்பட பல முக்கிய மாநகர சபைகளை அது ஆளுகிறது.

அக்கரபத்தனை, கொட்டகலை மற்றும் நுவரெலியா பிரதேச சபைகளில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் பதவியை வகிக்கிறது.

அதே நேரத்தில் துணைத் தலைவர்கள் பதவிகளை தேசிய மக்கள் சக்தி பிரதிநிதிகள் பெற்றுள்ளனர்.

இதற்கிடையில், எந்தவொரு கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மை இல்லாத 95 உள்ளூராட்சி மன்றங்களில் 53 இல் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி கட்டுப்பாட்டைப் பெற்றுள்ளதாகவும், கட்டுப்பாட்டைத் தீர்மானிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடையே உள் தேர்தல்கள் நடத்தப்பட்டதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். அந்த 53 சபைகளில் 22 இல் ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே நிர்வாகங்களை அமைத்துள்ளதாக அவர் கூறினார்.

வடக்கில் 16 மன்றங்களை தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. தற்போது, 53 மன்றங்கள் தேசிய மக்கள் சக்தி அல்லாத கட்சிகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

அதே நேரத்தில் நான்கு மன்றங்களின் நிர்வாகங்களை அமைப்பது சர்ச்சைகள் காரணமாக தாமதமாகியுள்ளது.

இரகசிய வாக்கெடுப்பின் போது ஏற்பட்ட உள் மோதல்கள் காரணமாக சீதாவகபுர நகராட்சி மன்றம், சீதாவகபுர பிரதேச சபை மற்றும் மாவத கம பிரதேச சபை ஆகியவற்றின் அமர்வுகள் இடைநிறுத்தப்பட்டன.

நிர்வாக சிக்கல்கள் காரணமாக ஆராட்சிகட்டுவ பிரதேச சபையின் தொடக்க அமர்வும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜூன் 20 ஆம் திகதிக்குள், நாடு முழுவதும் உள்ள 339 உள்ளூராட்சி மன்றங்களில் 245 இல் நிர்வாகங்கள் நிறுவப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஜூன் 24

தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்களின் ஜூன் மாத சம்பளம் நேற்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்காவிட்டால், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களின் மாதாந்த சம்பளம் ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதி வழங்கப்பட்டாலும், ஜூன் மாதத்துக்கான சம்பளம் இன்னும் கிடைக்கவில்லை என்று அதன் தலைவர் வணக்கத்திற்குரிய யல்வெல பன்னசேகர தேரர் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் சம்பளம் கடந்த மாதமும் தாமதமானது, இதற்கான காரணம் ஆராயப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார்.

"20 ஆம் திகதி சம்பளம் வழங்குவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு வழங்கப்படவில்லை. ஆசிரியர்களின் சம்பளம் வலயக் கல்விக் காரியாலயங்கள் மூலம் வழங்கப்படுகிறது. தேவையான அறிவுறுத்தல்கள் இன்னும் கிடைக்கவில்லை. எல்லோரும் தங்கள் சம்பளத்திற்காக காத்திருக்கிறார்கள். இது ஏன் இவ்வாறு நடக்கிறது என்பதை கண்டறிய வேண்டும்" என அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் நேற்று கோர விபத்து 15 வயது சிறுமி உட்பட இருவர் பலி!

## படுகாயமடைந்த பெண் மருத்துவமனையில்

மட்டக்களப்பு, ஜூன் 24

**மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற கார் விபத்தில் 15 வயது சிறுமி உட்பட இருவர் உயிரிழந்ததுடன் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

இந்த விபத்து நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 04. 45 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

வந்தாறுமூலையில் இருந்து களுவங்கேணி நோக்கி பயணித்த கார், இரண்டாவது மைல் கல் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி பனைமரத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காரை செலுத்தி சென்றவர் மற்றும் காரில் பயணித்த 15 வயது சிறுமி உயிரிழந்ததுடன், பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தில், மட்டக்களப்பு சின்ன ஊறணி கருவப்பங்கேணி செலியன் வீதியைச் சேர்ந்த சாரதியும் கருவப்பங்கேணி மற்றும் நாவலர் வீதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியும் உயிரிழந்தனர்.

உயிரிழந்த 15 வயது சிறுமியான மகளுடன் கருவப்பங்கேணியில் உள்ள அவர்களது பன்றிவளர்க்கும் பண்ணையை பார்ப்பதற்காக சம்பவதினமான நேற்று அதிகாலை கார் சாரதியுடன் படுகாயமடைந்த பெண் பயணித்த போது கார் வேகக் கட்டுப்பாட்டை மீறி பனைமரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

படுகாயமடைந்த சிறுமியின் தாயாரான பெண் மட்டக்களப்பு போதனா மருத்துவம னையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# காரைதீவு பிரதேச சபை தவிசாளராக பாஸ்கரன்?

காரைதீவு, ஜூன் 24

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபைக்கு தவிசாளராக முதல் இரண்டு வருடங்கள் சுப்பிரமணியம் பாஸ்கரனும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலும் நியமிக்கப்படுவதாக கட்சியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் எழுத்து மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தி யுள்ளார்.

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக யார் தவிசாளர் என்பதை தமிழ் அரசுக்கட்சி பகிரங்கமாக அறிவிக்காமல் மௌனம் காத்து வந்தது.

கடந்த சனிக்கிழமை அக்கரைப்பற்றில் நடைபெற்ற உள்ளூராட்சி உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வில் கூட முடிவு அறிவிக்கப்படவில்லை.

ஆனால் நேற்று முன்தினம் இம் முடிவு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளதாவது,

தவிசாளர் தெரிவு நடைபெறும் இடத்துக்கு வராமல் இருப்பது, காலம் தாழ்த்தி வருகை தருவது, வாக்களிக்காமல் இருப்பது அல்லது வேறொருவருக்கு வாக்களிப்பது ஆகியன கட்சியின் முடிவை மீறியதாக கருதப்படும் என்பதோடு கட்சியின் முடிவை மீறியமைக்காக ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டி வரும் என்பதையும் அறியத்தருகின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(எ- 08)

# மூதூர் பிரதேச சபையை கைப்பற்றியது தமிழரசு



திருகோணமலை, ஜூன் 14

மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு நேற்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். அஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த செல்வரெத்தினம் பிரகலாதன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். கடந்த நான்கு தசாப்தங்களுக்கு பின்னர் தமிழர் ஒருவர் மூதூர் பிரதேச சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

தவிசாளர் தெரிவில் 22 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் தமிழ் அரசுக் கட்சி 5, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 , தேசிய மக்கள் சக்தி 3, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 3, ஐக்கிய மக்கள் சக்தி 2, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 2, தேசிய காங்கிரஸ் 1, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி 1, சுயச்சைக் குழு 1 என இச் சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

தவிசாளர் தெரிவில் இருவர் போட்டியிட்டனர். இதில் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த செ. பிரகலாதன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். உப தவிசாளராக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம். பைசர் தெரிவு செய்யப்பட்டார்.

(எ)

# பொலிஸார் அணிவகுப்பு





நிந்தவூர், ஜூன் 24

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2025ஆம் ஆண்டுக்கான அணிவகுப்பு மரியாதையும் பரிசோதனையும் பொலிஸ் நிலைய வளாகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். நிஷாந்த வெதகே தலைமையில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையில் அக்கரைப்பற்று பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி. டந்தநாராயண கலந்து கொண்டு அணிவகுப்பு மரியாதையை பார் வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

(எ-01)

# மின்சாரம் தாக்கியதில் யானை பலி



அம்பாறை, ஜூன் 24

அம்பாறையில் தமன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரனிகம பகுதியில் உள்ள வயல் ஒன்றில் மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை ஒன்று உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெரனிகம பகுதிக்கு தினமும் இரவு வேளைகளில் காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக வருவதாகவும் பயிர்கள் மற்றும் வீடுகளை சேதப்படுத்துவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல முறை கோரிக்கை விடுத்துவந்ததாகவும் மக்கள் தெரிவித்தனர். (எ)

# மட்டக்களப்பில் திடீரென தீப்பற்றி எரிந்தது வான்





மட்டக்களப்பு, ஜூன் 24

மட்டக்களப்பு நகரில் பாடுமீன் வீதியிலுள்ள வீடொன்றின் முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வான் ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை திடீரென தீப்பற்றி எரிந்ததையடுத்து தீயணைக்கும் படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.


இருப்பினும் வான் முற்றாக எரிந்து நாசமானதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் இருந்து மட்டக்களப்பிலுள்ள உறவினர் வீட்டுக்கு குறித்த வானில் வந்தவர்கள், வானை வீட்டின் முன் நிறுத்திவிட்டு நித்திரைக்கு சென்ற நிலையில் வான் அதிகாலை 01.30 மணியளவில் தீப்பற்றியதை கண்டு உடன் தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# சர்வதேச யோகா தினம்



திருகோணமலை, ஜூன் 24

சர்வதேச யோகா தினம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை திருகோணமலை கடற்கரையில் நடைபெற்றது.


இதன்போது யோகாசன பயிற்சிகள், கடற்கரையை சுத்தம் செய்யும் பணிகள் மற்றும் அனைவருக்கும் சத்துணவும் வழங்கப்பட்டன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க தாக்குதலுக்குப் பின்

# மிகப்பெரிய ஏவுகணைகளை வீசி இஸ்ரேலை உருக்குலைத்த ஈரான்



தெஹ்ரான், ஜூன் 24

**அமெரிக்காவின் விமானத் தாக்குதலுக்குப் பின் இஸ்ரேல் மீது மிகப் பெரிய ஏவுகணைகளை வீசி ஈரான் மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தி வருகிறது.**

குறிப்பாக கொராம்ஷர் - 4 என்ற மிகப் பெரிய ஏவுகணைகள் மூலம் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் 1,500 கிலோ வெடிபொருள் இருப்பதால், இஸ்ரேலில் உள்ள கட்டடங்கள் மிகப் பெரியளவில் சேதமடைந்து வருகின்றன.

ஈரானில் உள்ள 3 முக்கிய அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்கா நேற்று முன்தினம் அதிகாலை குண்டு வீசியது. இதனால் கோபமடைந்துள்ள ஈரான் இஸ்ரேல் மீது கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. 2,000 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் இந்த ஏவுகணையில் 1,500 கிலோ வெடிபொருள் உள்ளது. இது இஸ்ரேலில் உள்ள கட்டடங்களில் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க தாக்குதலுக்குப்பின் கொராம்ஷர்-4 உட்பட 40 ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஈரான் நேற்று முன்தினம் வீசியது.

டெல் அவிவ் நகரில் உள்ள வணிக வளாகம், வங்கி உட்பட பல கட்டடங் கள் இந்தத் தாக்குதலில் சேதம டைந்தன. இதில் 11 பேர் காய மடைந்தனெர். சேதமடைந்த பகுதிகளில் இஸ்ரேல் மீட்புக் குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

ட்ரம்ப் ஒரு போர்க் குற்றவாளி

# அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம் இஸ்ரேலுக்கு எதிராக கோஷம்




நியூயோர்க், ஜூன் 24

ஈரான் மீது அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலுக்கு எதிராக அமெரிக்காவில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை, அவர்கள் இஸ்ரேலுக்கு எதிராக கோஷம் எழுப்பியதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஈரான் மீது ஒப்ரேஷன் ரைசிங் லயன் என்ற பெயரில் கடந்த 13ஆம் திகதி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அப்போது, ஈரானின் அணு ஆயுத பயன்பாட்டுக்கு எதிரான தாக்குதல் இது என இஸ்ரேல் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து ஈரானும் பதில் தாக்குதலில் ஈடுபட்டது. இதனால், 2 நாடுகள் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்தது. இந்த நிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் போரில் இறங்கியது. ஈரானின் பர்தவ், நடான்ஸ் மற்றும் எஸ்பஹான் ஆகிய 3 அணு உலைகள் மீது நேற்று முன்தினம் அதிகாலை அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இந்த நிலையில், அமெரிக்காவின் நியூயோர்க் நகர வீதிகளில் நேற்று நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் பலஸ்தீனிய கொடிகளை அசைத்தபடி கோஷம் எழுப்பினர். ஈரான் மீது நடத்தப்படும் போரை நிறுத்தவும் ஈரானை தொடாதே, ட்ரம்ப் ஒரு போர்க் குற்றவாளி போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியபடி சென்றனர்.

ஈரானுடன் மோதலை தொடங்கிய மற்றும் காஸா மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல் ஆகியவற்றை சுட்டிக் காட்டி இஸ்ரேலுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர். இதனால், பாதுகாப்புக்காக பொலிஸார் பல இடங்களில் குவிக்கப்பட்டனர். (எ)

மத்திய கிழக்கில் போர் பதற்றம் உச்சம்

# அமெரிக்க மக்களுக்கு உலகளாவிய எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூன் 24

மத்திய கிழக்கு மோதல் தொடர்பில் அமெரிக்கர்களுக்கு அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு "உலகளாவிய எச்சரிக்கை" விடுத்துள்ளது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதலால் மத்திய கிழக்கு முழுவதும் பயணங்களுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

அவ்வப்போது வான்வெளி மூடப்பட்டு வரு கிறது. அமெரிக்க குடிமக்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க மக்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது.

உலகெங்கிலும் உள்ள அமெரிக்க குடிமக்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று வெளிவிவகாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. பயணத்தைத் திட்டமிடும் போது எங்கள் பயண ஆலோசனை, நாட்டுத் தகவல் மற்றும் சமீபத்திய பாதுகாப்பு எச்சரிக்கைகளை கவனமாகப் படிக்கவும் -இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் தாக்குதல் தொடங்கியிருப்பதால் மத்திய கிழக்கில் போர் பதற்றம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. (எ)

# ஈரானில் 865 பேர் பலி

வாஷிங்டன், ஜூன் 23

ஈரான் - இஸ்ரேல் இடையே 11 நாட்களாக நடந்து வரும் தாக்குதலால் உயிரிழப்பு அதிகரித்தது. அந்தவகையில் ஈரானில் 865 பேர் பலியாகியதாகவும், 3,396 பேர் காயமடைந்திருப்பதா கவும் வாஷிங்டனை மையமாக கொண்டு செயல்பட்டு வரும் மனித உரிமை அமைப்பு கூறி யுள்ளது.

இதேநேரம் சுமார் 400 பேர் உயிரிழந்ததுடன், 3,056 பேர் காயமடைந்திருப்பதாக ஈரான் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இஸ்ரேலில் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறித்து அதிகாரபூர்வ தகவல் இல்லை. எனினும் 25 பேர் உயிரிழந்ததாகவும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்த தாகவும் கடைசியாக அங்கி ருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன. (எ)

# தேவாலயத்தில் குண்டுவெடிப்பு சிரியாவில் 20 பேர் உயிரிழப்பு!

டமாஸ்கஸ், ஜூன் 24

சிரியாவில் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் சிக்கி 20 பேர் பலியாகினர்.

மேற்கு ஆசிய நாடான சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸின் புறநகர் பகுதியான டுவைலாவில் மார் எலியாஸ் என்ற தேவாலயம் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏராளமானோர் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.



அப்போது, தேவாலயத்தில் பயங்கர குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. தேவாலயத்தில் மக்களோடு மக்களாக இருந்த பயங்கரவாதி தற்கொலை குண்டுவெடிப்பை நிகழ்த்தினான். இந்தத் தாக்குதலில் தேவாலயத்தில் இருந்த 13 பேர் உயிரிழந்ததாகவும் மேலும் 53 பேர் படுகாயம் அடைந்ததாகவும் அந்த நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், குண்டு வெடிப்பில் பலி எண்ணிக்கை அதிகரித்ததாக நேற்றுக்காலை தகவல் வெளியானது. இதன்படி 20 பேர் உயிரிழந்தனர். மேலும், இந்த விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தேவாலயத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# காஸாவில் தாக்குதல் 33 பேர் உயிரிழந்தனர்



காஸா, ஜூன் 24

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 33 பேர் உயிரிழந்தனர்.

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காஸா முனையில் தாக்குதல் நடத்தி வருகிறது.

காஸா முனையில் இஸ்ரேல் ஓராண்டுக்குமேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், காஸா முனையில் இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் 33 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் காஸாவில் இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 55 ஆயிரத்து 941 ஆக அதிகரித்தது. இந்த மோதலில் இதுவரை ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹாலே ஓபின் ரென்னிஸ் அலெக்சாண்டர் சம்பியன்

பெர்லின், ஜூன் 24

ஹாலே ஓபின் ரென்னிஸ் தொடரில் அலெக்சாண்டர் பப்ளிக் சம்பியனானார்.

பல முன்னணி வீரர்கள் பங்கேற்ற ஹாலே ஓபின் ரென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் கஜகஸ்தானின் அலெக்சாண்டர் பப்ளிக், ரஷ்யாவின் டானியல் மெத்வதேவ் ஆகியோர் மோதினர்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அலெக்சாண்டர் பப்ளிக் 6-3, 7-6 (7-4) என்ற செற் கணக்கில் மெத்வதேவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார். (எ)

## மோசமான சாதனையில் இந்திய அணி முதலிடம்

லீட்ஸ், ஜூன் 24

471 ஓட்டங்கள் குவித்தும் மோசமான சாதனை பட்டியலில் இந்திய அணி முதலிடம் பிடித்தது.

இங்கிலாந்துக்குச் சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இதன்படி இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்று வருகிறது.

இதில், முதல் இன்னிங்ஸில் 3 வீரர்கள் சதமடித்தும் இந்திய அணியால் 471 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 3 வீரர்கள் சதமடித்தும் ஓர் இன்னிங்ஸில் குறைந்த ஓட்டங்கள் அடித்த அணி என்ற மோசமான சாதனையை இந்தியா படைத்துள்ளது.

அந்த பட்டியல் வருமாறு,

1. இந்தியா - 471 ஓட்டங்கள்,
2. தென்னாபிரிக்கா - 475 ஓட்டங்கள்,
3. அவுஸ்திரேலியா - 494 ஓட்டங்கள்,
4. மேற்கு இந்திய தீவுகள் - 497 ஓட்டங்கள். (எ)

## சதம் அடித்ததை பல்டி அடித்து கொண்டாடினார் ரிஷப் பண்ட்



லீட்ஸ், ஜூன் 24

சதம் அடித்ததை தனது பாணியில் பல்டி அடித்து கொண்டாடினார் ரிஷப் பண்ட்.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் தொடங்கியது.

இதில், அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரிஷப் பண்ட் சிக்ஸர் அடித்து தனது சதத்தை பூர்த்தி செய்தார். டெஸ்ட் போட்டிகளில் ரிஷப் பண்ட் அடித்த 7ஆவது சதம் இதுவாகும். இந்த நிலையில் சதம் அடித்ததை தனது பாணியில் பல்டி அடித்து ரிஷப் பண்ட் கொண்டாடினார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. (எ)

# முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி ஆதிக்கம்



லீட்ஸ், ஜூன் 24

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்ஸில் நடைபெற்று வருகிறது.

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 113 ஓவர்களில் 471 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, 100. 4 ஓவர்களில் 465 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 6 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இந்தியா தரப்பில் அபாரமாக பந்து வீசிய பும்ரா 5 விக்கெட்களும், பிரசித் கிருஷ்ணா 3 விக்கெட்களும், சிராஜ் 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து களமிறங்கிய இந்திய அணியில் ஜெய்ஸ்வால் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார். அவரைத்தொடர்ந்து களமிறங்கிய சாய் சுதர்ஷன் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து கே.எல். ராகுலுடன் சுப்மன் கில் ஜோடி சேர்ந்தார். இந்தச் சூழலில் 3ஆம் நாள் முடிவுக்கு வந்தது. ஆட்டநேர முடிவில் இந்திய அணி 23.5 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 90 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ராகுல் 47 ஓட்டங்களும், சுப்மன் கில் 6 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து அணியின் சார்பில் பிரைடன் கார்ஸ் மற்றும் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

தற்போது இந்திய அணி இங்கிலாந்து அணியை விட 96 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. (எ)

## ரி- 20 உலக கிண்ணம் கனடா அணி தகுதி

ஆன்டாரியோ, ஜூன் 24

ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு கனடா அணி தகுதி பெற்றது. 20 அணிகள் பங்கேற்கும் 10ஆவது ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2026) பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதி சுற்று தற்போது நடைபெற்று வருகிறது. இதில் 4 அணிகள் இடையிலான அமெரிக்க மண்டலத்துக்கான தகுதி சுற்று கனடாவின் ஆன்டாரியோ நகரில் நடைபெறுகிறது.

இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் கனடா அணி, பஹாமாஸை 57 ஓட்டங்களில் சுருட்டியதுடன், அந்த இலக்கை 5.3 ஓவர்களிலேயே எட்டிப்பிடித்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தொடர்ந்து 5ஆவது வெற்றியை பெற்ற கனடா அணி புள்ளிப் பட்டியலில் முதலிடத்தை உறுதி செய்த துடன், ரி - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கு 13ஆவது அணியாகத் தகுதி பெற்றது. (எ)

## பெர்லின் ஓபின் ரென்னிஸ் வோண்ட்ருசோவா சம்பியன்

பெர்லின், ஜூன் 24

பெர்லின் ஓபின் ரென்னிஸ் தொடரில் செக் குடியரசு வீராங்கனை மார்க்கெட்டா வோண்ட்ருசோவா சம்பியனானார்.

மகளிர் மட்டும் பங்கேற்ற பெர்லின் ஓபின் ரென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடைபெற்றது.

இந்தத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் செக் குடியரசின் மார்க்கெட்டா வோண்ட்ருசோவா, சீனாவின் வாங் சின்யு உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செற்றை 7-6 (12-10) என்ற புள்ளிக்கணக்கில் வோண்ட்ருசோவாவும், 2ஆவது செற்றை 6-4 என்ற புள்ளிக்கணக்கில் வாங் சின்யும் கைப்பற்றினர்.

இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்கும் 3ஆவது செற்றில் ஆட்டம் அனல் பறந்தது.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய வோண்ட்ருசோவா 6-2 என்ற புள்ளிக்கணக்கில் வாங் சின்யுவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். (எ)




17 [illegible] வவுனியா அளகெல மகா வித்தியாலய அணி சம்பியனானது. இறுதிப் போட்டியில் [illegible] மகா வித்தியாலய அணியை 2. 0 எனும் அடிப்படையில் வீழ்த்தி வவுனியா அளகெல அணி சம்பியனானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி....

அமர்வு நேற்று பிற்பகல் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரை தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை சேர்ந்த செல்வரத்தினம் மயூரனும், இலங்கைத் தமிழரசுக் கட்சியை சேர்ந்த பொன்னையா குகதாசனும் முன்மொழியப்பட்டனர்.

இதில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை சேர்ந்த செல்வரத்தினம் மயூரனுக்கு ஆதரவாக, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை சேர்ந்த 5 உறுப்பினர்கள், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை சேர்ந்த 5 உறுப்பினர்கள் என மொத்தமாக 10 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை சேர்ந்த பொன்னையா குகதாசனுக்கு ஆதரவாக, இலங்கைத் தமிழரசுக் கட்சியை சேர்ந்த 8 உறுப்பினர்களும், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் தலா ஒரு உறுப்பினர் என மொத்தமாக 10 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.

தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த 6 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை சேர்ந்த ஒருவரும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது நடுநிலையாக செயற்பட்டனர்.

அத்தோடு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை சேர்ந்த யோகநாதன் கல்யாணி எனும் உறுப்பினருக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

போட்டியிட்ட இரண்டு வேட்பாளர்களும் தலா 10 வாக்குகளை பெற்ற நிலையில் திருவுளச் சீட்டு மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சியை சேர்ந்த பொன்னையா குகதாசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ந்து இடம்பெற்ற பிரதித் தவிசாளர் தெரிவில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை இராமநாதன் யோகேஸ்வரன் 11 வாக்குகளை பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

28 உறுப்பினர்களை கொண்ட சாவகச்சேரி பிரதேச சபைக்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 8 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் 7 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பில் 6 உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் 5 உறுப்பினர்களும், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் தலா ஒரு உறுப்பினரும் நடந்து முடிந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சர்வதேச....

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்போராட்டமானது உலகத்தின் கண்களை திறப்பதற்கான போராட்டமாகும். எங்களுக்கு நடந்தது இனப்படுகொலை, தமிழ் மக்களுக்கு நீதி விசாரணை வேண்டும். அது சர்வதேச நீதி விசாரணையாக இருக்க வேண்டும்.

சிங்கள அரசாங்கங்களால் நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். தற்போதைய அநுர அரசும் தமிழ் மக்களை ஏமாற்றிவருகிறது. கடந்த கால ஆட்சியாளர்களுக்கு சளைத்தவர்கள் நாம் அல்லர் என்ற வகையில் அண்மைய நடவடிக்கைகள் அமைந்து இருக்கின்றன.

எனவே இப்போராட்டமானது சர்வதேச விசாரணையை வலியுறுத்திய வகையிலும், இங்கு கண்டு எடுக்கப்படுகிற எலும்புக் கூடுகளுக்கு நீதி விசாரணை வேண்டியும் இப்போராட்டம் இடம்பெற்று வருகிறது.

இந்த போராட்டத்தில் திரள்கின்ற மக்கள் திரட்சி, உலகத்தின் கண்களையும் உலகத்தின் மனச்சாட்சிகளையும் திறக்கும். எனவே இப்போராட்டத்துக்கு அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் - என்றார். (அ)

## மனித...

விளக்கு போராட்டத்தை முன்னெடுக்கும் மக்கள் செயல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பு மேலும் தெரிவிக்கையில்-

- மனித புதைகுழி அகழ்வுகளில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தமது சமூகத்தின் வளங்களை பெற்று அதன் மூலம் சுதந்திரமான தொழில்நுட்ப உள்ளீட்டை பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்குமாறு அழுத்தம் வழங்கவேண்டும்.
- புதைகுழி அகழ்வு பணி தொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றினால் கோரப்படும் அனைத்து நிதி கோரிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என அழுத்தம் கொடுக்கவேண்டும்.
- இதுவரை வெளிவந்த தகவல்களின் பிரகாரம் அனைத்து மனித புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச கண்காணிப்புடன் அகழ்வுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்கவேண்டும் என வலியுறுத்தவேண்டும்.
- இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஜநாபொதுச்சபை ஊடாக ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு விடயம் பாரப் படுத்தப்படுத்தப்பட்டு அதன் ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையொன்றை சாத்தியப்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் முடுக்கிவிட வேண்டும் - என்றுள்ளது. (அ)

## செம்மணியில்...

உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

செம்மணி மண்ணில் புதையுண்டு போன உறவுகளுக்கு நீதி வேண்டிய போராட்டமாக 'அணையா விளக்கு' என்ற பெயரில் குதித்த போராட்டம் நடைபெற்று வருகிறது. நேற்று காலை 10.10 ஆரம்பிக்கப்பட போராட்டமானது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை 3 நாட்களுக்கு அகிம்சை வழியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.வருகைதரவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பார்வைக்கு பிரச்னையின் ஆழத்தை வலியுறுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள், பொது அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும் என சட்டத்தரணி வைஸ்ணவி சண்முகநாதன் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

## எமக்கு...

உணர்வுபூர்வமான நிகழ்வில் கலந்து கொண்டுள்ளோம்.தமிழ் மக்களின் வாழ்வில் நீண்ட காலம் ஏற்படுத்தப்பட்ட பல அழிவுகளுக்கு நீதி கோரி இப்போராட்டம் நடத்தப்படுகிறது.

இது மக்களின் மனங்களில் அழியாத தாகமாக இருக்கிறது. இதுவரை காலமும் நிகழ்த்தப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். இதனை உலக மக்கள் அனைவரும் சேர்ந்து செயற்படுத்த முன்வர வேண்டும்.

உலக நாடுகள் எல்லாம் எங்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிகளை அறிந்திருந்தாலும் அதைப்பற்றி எந்தவிதமான நீதியும் கிடைக்காமல் மக்கள் நீண்டகாலமாக அணையாத தாகத்தோடு அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே இவற்றுக்கு எல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தோடு இந்த அணையா விளக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக நாங்கள் நிற்கின்ற செம்மணி பிரதேசத்தில் மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பல அப்பாவி மக்களது மனித எலும்புக்கூடுகள்,எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுவரும் இந்தச் சூழலில் இந்த நிகழ்வு மிகவும் முக்கியமானதாகும். - என்றார். (அ)

## மழையுடன்...

அத்துடன் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகளும், ஒரு சிறு மற்றும் மத்திய வர்த்தக முயற்சியும், 7 அடிப்படை கட்டமைப்புகளும் சேதமடைந்துள்ளன.

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 9 வீடுகளும் ஒரு அடிப்படை கட்டமைப்பும் சேதமடைந்துள்ளன.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 18பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் இரண்டு சிறு மற்றும் மத்திய முயற்சிகளும் ஒரு அடிப்படை கட்டமைப்பும் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 48பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12 வீடுகளும் 2 அடிப்படை கட்டமைப்புகள் உம் சேதமடைந்துள்ளன.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகளும் அடிப்படை கட்டமைப்பு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-05)

## ஐ.நா.மனித...

எங்கள் உறவுகளுக்காக நடக்கின்ற போராட்டம். ஏனெனில், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

முன்னதாக 2011ஆம் ஆண்டு, 2016ஆம் ஆண்டும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்கள் இலங்கை வந்திருந்தனர். இதில் 2016ஆம் ஆண்டு ஆணையாளரை வடக்கு பகுதிகளுக்கு விரவிடாமல் செய்திருந்தனர்.

மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் மீளவும் இன்று இலங்கை வருகின்றார். இம்முறையும் மனித உரிமைகள் ஆணையாளரை வடக்குக்கு வரவிடாமல் செய்ய உச்ச கட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாளை (இன்று) பாராளுமன்றில் கட்சித் தலைவர்கள் மாத்திரம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை சந்திக்கும் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் சிறிதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டவர்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த சந்திப்பில் முள்ளிவாய்க்காலில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதை அவர்கள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கூற உதவி செய்யவேண்டும்.

இதனிடையே, நாளைய தினம் (இன்று) என்னை பாராளுமன்றம் செல்ல விடாமல் தடுக்க உச்சகட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், நான் கண்டிப்பாக பாராளுமன்றம் சென்று அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வேன்.

இதன்போது தமிழர்களுக்கு எதிராக நடந்த அனைத்து இனப்படுகொலை சம்பவங்களும் எழுத்து மூலம் அறிவிக்கப்படும் என்பதுடன், அதற்கான முழு ஆவணங்களும் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன - என்றார். (அ)

## பச்சிலைப்பள்ளி...

இதன்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் சுப்பிரமணியம் சுரேன் பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

வேறு கட்சிகளில் இருந்து ஒருவரது பெயரும் பரிந்துரைக்கப்படாத நிலையில் சுப்ரமணியம் சுரேன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

உப தவிசாளராக சிவகுரு செல்வராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பாக 06 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பாக 03 உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பாக 03 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பாக 01 உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 3ஆவது...

காணிகளை விடுவிக்கக் கோரி கடந்த சனிக்கிழமை மயிலிட்டிச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் நேற்றும் 500 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு உணவு சமைத்து அவ்விடத்தை விட்டு நகராமல் அமைதி வழியில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த போராட்டத்தில் மயிலிட்டி, பலாலி, அன்ரனிபுரம், காங்கேசன்துறை உள்ளிட்ட காணிகளை சேர்ந்த வயோதிபர்கள் இளைஞர்கள், சிறுவர்கள், பெண்களின் என பல தரப்பினரும் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து போன மக்கள் யுத்தம் நிறைவடைந்து தமது காணிகளுக்கு வந்த பின்னரும் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் காணிகளை விடுவிப்பதாக கூறி சிறு சிறு இடங்களை மாத்திரம் விடுவித்துள்ளன.

ஆனால் மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. இதனால் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் இன்று வரையும் காணிச் சொந்தக்காரர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக காணிகள் வைத்திருப்பதாகக் கூறும் இராணுவம் தற்போது மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகிய நிலையிலும் அவர்களின் காணிகள் விடுவிக்கப்படாமல் வைத்திருப்பது மக்கள் தொடர்ந்தும் அகதிகளாகவே வாழும் நிலைக்கு உட்படுத்துவதாகவே தாம் உணர்வதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (அ)

## நேற்றுக்...

2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

விஜயத்தின்போது, அவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

மேலும், வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட அரசு அதிகாரிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் இராஜதந்திர சமூக உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

வோல்கர் டர்க், தலதா மாளிகையில் வழிபாடு நடத்தவும், மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார்.

அத்துடன், யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்குச் சென்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்களைச் சந்திக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாத தடைச் சட்டம் அரசாங்கத்துக்கு அழுத்தம்!

## மனித உரிமை ஆணைக்குழு கடிதம்

கொழும்பு, ஜூன் 24

**பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யுமாறு வலியுறுத்தி நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.**

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் மொஹமட் ருஸ்டி என்ற இளைஞர், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில் தங்களால் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை அண்மையில் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டது.

எந்தவொரு குற்றத்துக்கும் ஆதாரங்கள் இல்லாத போதிலும், ருஸ்டியை 14 நாட்கள் தடுத்து வைத்து, “மத ரீதியான கடும்போக்காளர்“ என சித்தரிப்பதற்கு முயற்சிக்கப்பட்டது.

அத்துடன், விடுவிக்கப்பட்டவுடன் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் வாராந்தம் முன்னிலையாதல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட கட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகளின் கீழ் வைக்கப்பட்டார்.

இந்த நடவடிக்கைகள் ருஸ்டியின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


இதேவேளை மொஹமட் ருஷ்டியின் வழக்கானது பயங்கரவாத தடைச் சட்டத்தின் மிகமோசமான ஒடுக்குமுறை போக்கையும், சட்ட அமுலாக்க அதிகாரிகள் அச்சட்டத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு உள்ள சாத்தியப்பாட்டையும் தெளிவாகக் காண்பிப்பதாகவும் நீதியமைச்சருக்கான கடிதத்தில் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், குற்றம் தொடர்பான வரைவிலக்கணம், விசாரணைகளின்றி நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைப்பதற்கான சாத்தியம், குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் சந்தேகநபரை நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்த வேண்டிய அவசியமின்மை, பிணைக் கோரிக்கை நிராகரிப்பு மற்றும் பொலிஸிடம் வழங்கும் வாக்குமூலம் நீதிமன்றத்தினால் சாட்சியாக ஏற்கப்படல் ஆகிய ஐந்து விடயங்களும் இந்த சட்டத்தின் ஒடுக்குமுறை போக்குக்கான முக்கிய காரணங்களாக அமைந்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த காரணங்களுக்காக பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் எனவும் நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

(அ)

## நிதி அமைச்சு செயலராக ஹர்ஷன சூரியப்பெரும!



கொழும்பு, ஜூன் 24

நிதி அமைச்சின் புதிய செயலாளராக ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்பட்டு நேற்று கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராக கடமையாற்றிய அவர் அண் மையில் அந்த பதவியில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகினார்.

நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் மகிந்த சிறிவர்தன அந்த பதவியில் இருந்து ஓய்வு பெற்றதை தொடர்ந்து அவர் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ)

## யாழில் தெங்கு செய்கை வாரம்!

கொழும்பு, ஜூன் 24

தென்னை செய்கையை சேதப்படுத்தும் வெள்ளை ஈக்கள் உள்ளிட்ட பூச்சிகளை எதிர்த்துப் போராடுவதற்காக தென்னை அபிவிருத்திச் சபை தெங்கு செய்கை வாரம் என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியை மையமாகக் கொண்டு, இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் அடுத்த மாதம் 14 ஆம் தினதி தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது என்று தென்னை அபிவிருத்தி சபையின் தலைவர் டாக்டர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்-

அனைத்து மாவட்டங்களிலும் தெங்கு செய்கை வாரம்”திட்டத்தை அறிவித்து உடனடி நடவடிக்கையாக அதை செயல்படுத்த முடிவு செய்துள்ளோம். அதன்படி, ஜூலை 14 ஆம் திகதி இது செயல்படுத்தப்படும்.

வெள்ளை ஈக்கு தீர்வாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து தென்னை மரங்களும் தண்ணீர் தெளிக்கப்பட்டு கழுவப்படும். இது ஒரு பெரிய வேலை. ஆனால் இப்போது அதற்குத் தேவையான மனிதவளத்தையும் இயந்திரங்களையும் நாங்கள் தயார் செய்து வருகிறோம்-என்றார்.

(அ)

## ஜூன் மாதத்தின் முதல் 18 நாட்களில் 74,570 சுற்றுலாப் பயணிகள் வருகை!

கொழும்பு, ஜூன் 24

2025 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தின் முதல் 18 நாட்களில் 74,570 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், ஜூன் மாதத்தின் முதல் 18 நாட்களில் இந்தியாவிலிருந்து 22,000 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6,158 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 4,789 சுற்றுலாப் பயணிகளும், பங்களாதேஷிலிருந்து 4,515 சுற்றுலாப் பயணிகளும், ஆஸ்திரேலியாவிலிருந்து 3,577 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 3,526 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஜூன் மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 11 இலட்சத்து 04 ஆயிரத்து 373 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

## நாட்டின் பொருளாதாரத்தில் ஆழமான மாற்றம் வேண்டும்!

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 24

பொருளாதாரத்தில் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதற்காக அனைத்து இளைஞர்களும் அணிதிரள வேண்டும் என அவர் வலியுறுத்தல் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கை தற்போது சோதனைக் கட்டத்தில் இருந்து வருகிறது.

உலக வங்கி தற்போது நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி 3.5 வீதத்திலிருந்து 3.1 வீதமாக திருத்தங்களுக்கு உள்ளாக்கியுள்ளது.

இது மீட்சி நிலையல்ல. மாறாக இது நாட்டின் தேக்கநிலையை குறித்து காட்டுகின்றன.

இந்தப் புள்ளிவிவரங்கள் சாதகமானதாக இல்லை என்பதால், நாம் இது குறித்து அவதானத்தோடு இருக்க வேண்டும்.

நமது நாட்டின் பொருளாதாரத்தில் தற்போது நிலவும் அமைதி, புயலுக்கு முந்தைய அமைதியைப் போன்றதாகும்.

நமது நாடு இன்னும் ஒரு பெரிய கடன் மலையில் சிக்கித் தவிக்கிறது. இந்த சலுகை காலம் 2028 இல் முடிவடைகின்றன.

எனவே அன்றிலிருந்து நாம் மீண்டும் கடனை செலுத்த வேண்டியுள்ளது. இதற்காக, ஒரு நாடாக நாம் ஒரு ஆழமான மாற்றத்தை ஆரம்பிக்கவில்லையென்றால், நாடு மீண்டும் இரண்டாவது முறையாக வங்குரோத்து நிலையை அடையும்.

இந்த அவதானம் குறித்து நாம் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்-என்றார்.

(அ)

## ஊழல், குற்ற அரசியல்வாதிகளின் முகவரியாக மாறுகின்றது மகசின்!

### அமைச்சர் சந்திரசேகர் கூறுகிறார்



கிளிநொச்சி, ஜூன் 24

“ஊழல், மோசடிகள் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகளின் முகவரியாக மகசின் சிறைச்சாலை மாறிவருகின்றது” என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் உயர் திறமைகளை வெளிப்படுத்திய சிறந்த மாணவர்களை கௌரவிக்கும் ஜனாதிபதி நிதியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கிளிநொச்சி நெலும் பியசவில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன், சாதாரண மக்களுக்கான ஜனாதிபதி நிதியத்தையும் பெரும் புள்ளிகளே கடந்த காலத்தில் பெற்றுள்ளனர். தற்போதுதான் அதனை சாதாரண மக்களுக்கு - தேவையுள்ள மக்களுக்கு உரிய வகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கடந்த காலங்களில் ஊழல், மோசடிகளில், குற்றச்செயல்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொருவராக சிறைச்சாலைக்கு செல்கின்றனர். எதிர்காலத்தில் இந்நாட்டிலுள்ள பெருவாரியான அரசியல்வாதிக ளின் முகவரியாக மகசின் சிறைச்சாலை மாறக்கூடும். அவர்களின் மக்களின் பணத்தையே கொள்ளையடித்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஜனாதிபதிகள்கூட இரு சம்பளங்களை பெற்றுவந்தனர். எம்.பிக்களாக இருந்ததற்குரிய சம்பளத்தையும் பெற்றனர். ஜனாதிபதிக்குரிய சம்பளத்தைபெறும் பெற்றனர். ஆனால், எமது ஜனாதிபதி அவ்வாறு செயல்படுவதில்லை. ஜனாதிபதி மாளிகைகளைக்கூட நிராகரித்துள்ளார். எமது அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களும் அப்படிதான். எந்தவொரு சலுகைகளையும் பெறவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சம்பளத்தை மட்டுமே பெறுகிறோம்-என்றார்.

(ஐ)

## கார் விபத்து பலர் காயம்!

கொழும்பு, ஜூன் 24

குருநாகல் - கிரிஎல்ல வீதியில் போபிட்டிய பகுதியில் இடம்பெற்ற கார் விபத்தில் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை 05.15 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கார் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது காரில் பயணித்த பலர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக தம்பதெனிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.